**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.110/2016**

2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் **வா.சா.3** சாட்சி **திரு.நாகராஜன்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. நாகராஜன் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**வா.சா.3 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் மூன்றாம் நபர் ஆவேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய தாயார் பெயர் சரோஜா. அவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் சி.கே.கந்தசாமி என்பவரிடமிருந்து என்னுடைய தாயார் கிரயம் வாங்கினார் என்றால் நான்கு நபர்களிடம் இருந்து கிரயம் வாங்கினார். வழக்குச்சொத்தை என்தாயார் 03.11.2011 ல் வாங்கியது என்றால் சரிதான். அது தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் விவசாய நிலமாக இருந்தது என்றால் சரிதான். இந்த சொத்துக்களைப்பொறுத்து என்னுடைய தாயாரும் ஒரு மோகன் என்பவரும் கிரய ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் சுபா என்று கையொப்பம் இட்டுள்ளவர் யார் என்று எனக்குத் தெரியாது. என்தாயார் வா.சா.ஆ.2 ல் சுபா என்பவருக்கு கிரய ஒப்பந்தம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. 2 ம் பிரதிவாதி சுபாவை எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. 2 ம் பிரதிவாதியும் என்னுடைய தாயாரும் இந்த சொத்துக்களைப்பொறுத்து கிரய ஒப்பந்தம் செய்துகொண்டதாக தாவாவில் கூறியுள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா விவரம் குறித்து எனக்குத் தெரியும். வழக்கில் என்னுடைய தாயார்

என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் நான் தெரிந்துகொள்ளவில்லை. சுவாவும் வாதி மோகனும் இந்த சொத்துக்களைப்பொறுத்து ஒரு கிரய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நீதிமன்றத்தில் ஆவணம் செய்துள்ள எனக்குத் தெரியுமா என்றால் நான் தெரிந்துகொள்ளவில்லை. என்னுடைய தாயாரும் மோகனும் இந்த சொத்துக்களைப்பொறுத்து ஒரு கிரய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. வழக்கைப்பற்றி தெரிந்து கொண்டதாக கூறியிருக்கும்நிலையில் 17.04.2013 ம் தேதியில் என்னுடைய தாயாரும் ஒரு மோகன் என்பவரும் ஒரு கிரய ஒப்பந்தம் செய்து கொண்டதாக தாவாவில் சொன்ன விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் நான் வெற்றுத்தாளில்தான் கையொப்பம் போட்டேன், நான் கையெழுத்து போடும்போது அதில் எதுவும் எழுதப்படவில்லை, பஞ்சாயத்துக்கு தேவைப்படுவதாக சொல்லி என்னுடைய மாமா வெற்றுத்தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார். தாவாச்சொத்துக்கள் மனைநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். 1 ம் வாதிதான் அதை மனை நிலங்களாக பிரித்தார். 1 ம் வாதி பவர் வாங்கிய விவரம் எனக்குத் தெரியும். பவர் எங்கு எழுதப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது, நான் அன்றைய தேதியில் வெளியூர் சென்றுவிட்டேன். பவர் பத்திரம் எதற்காக எவ்வளவு மனைகளுக்கு எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். பொது அதிகார ஆவணத்தை எழுதி தேதியிலேயே அந்த ரசீது எழுதப்பட்டது என்றால் இல்லை, 2-3 மாதங்கள் கழித்துதான் வெற்றுப்பேப்பரில் என் அம்மாவிடம் கையொப்பம் வாங்கிவிட்டு, என்னிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடைய தாய்மாமா பெயர் ராமசாமி. என்னுடைய தாய்மாமாவை இவ்வழக்கில் விசாரிக்க உள்ளேனா என்றால் என்தாய்மாமாவைத்தான் கேட்கவேண்டும். என்தாய்மாமாவிற்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியும். அவர் சொல்லித்தான் என்தாயார் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான், அவருடன் இன்னொரு நபரும் வந்திருந்தார். மனைநிலங்களை மனை பிரித்த பிறகு 3/4 பங்கு விற்று விட்டார்கள். அதை விற்றது தெரிந்து பவரை நான் ரத்து செய்து விட்டேன். அப்பொழுதாவது என்தாயாரிடம் கேட்டேனா என்றால் என்தாயார் பணம் எதுவும் வரவில்லை என்று சொன்னார். தற்பொழுது வழக்குச்சொத்து விலை அதிகம் என்றால் சரிதான். அதனால் முழுப்பணத்தையும் பெற்றுக்கொண்டு தற்பொழுது வெற்றுப்பேப்பரில் கையொப்பம் போட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பவர் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது

என்றால் சரியல்ல. அவர்கள் கோரும்படி வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.